www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**11 R**

Register no: 11510

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

மணி: 1:30 **வரலாறு** மதிப்பெண்கள்: 50

## பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

1. மெஹர் கார் ______ பண்பாட்டுடன் தொடர்புடையது.
   அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) இடை கற்காலம் ஈ) செம்பு காலம்
2. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.
   i) சேனானி - படை தளபதி
   ii) கிராமணி - கிராமத்தலைவர்
   iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது.
   iv) புரோகிதர் - ஆளுநர்
   மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது.
3. பத்து அரசர்களின் போர் எந்த ஆற்றங்கரையில் நடந்தது?
   அ) ஜீலம் ஆ) கோசி இ) புருசினி ஈ) சட்லஜ்
4. பகவதி சூத்திரம் ஒரு ______ நூலாகும்.
   அ) பௌத்தம் ஆ) சமணம் இ) ஆசீவகம் ஈ) வேதம்
5. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர்.
   அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
   இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்
6. ________ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
   அ) அர்த்த சாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ரராட்சசம்
7. _______ ராஜ சூனிய யாகத்தை நடத்தியவர்.
   அ) பெருநற்கிள்ளி ஆ) முதுகுடுமிப் பெருவழுதி
   இ) சிமுகா ஈ) அதியமான்
8. அலெக்சாண்டரின் திறன்மிக்க தளபதி ஒருவர்_____.
   அ) செலியுகஸ் நிகேடர் ஆ) அண்டிகோனஸ்
   இ) அண்டியோகஸ் ஈ) டெமெட்ரியஸ்
9. ______ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
   அ) அரிக்க மேடு ஆ) அதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்
10. பழங்கற்காலக் கருவிகள் முதன் முதலில் _____ இல் அடையாளம் காணப்பட்டன.
   அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883

## பகுதி - II

**II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 x 2 = 10

11. ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
12. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
13. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.
14. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்?
15. பண்ட மாற்று முறையை விளக்குக.
16. யவன என்ற சொல்லுக்கு பொருள் என்ன?
17. பெருங்குளம்: சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

**III. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 x 3 = 15

18. இந்தியாவின் இடைப் பழங்கற்காலத்தின் முக்கிய கூறுகளை எழுதுக.
19. தென்னிந்தியாவின் செம்பு காலப் பண்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்கவும்.
20. காட்டை திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
21. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவரும் நகரப் பண்புகளை கூறுக.
22. சங்ககாலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் யாது?
23. மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை
24. அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பில் குறித்து எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3×5=15

25. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

26. அ) இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் யாவை?

(அல்லது)

ஆ) மௌரிய ஆட்சி அமைப்பின் முக்கிய கூறுகளை விவரிக்கவும்.

27. அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

(அல்லது)

ஆ) குஷான பேரரசில் கண்ட இடங்களை இந்திய ஆறுகள் வரைபடத்தில் குறிக்கவும்.

அ) காந்தாரம் ஆ) தட்சசீலம் இ) இந்திர பிரஸ்தம்

ஈ) பெஷாவர் உ) மதுரா



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com